DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C. No.77/2021 |
| Deposition of witness | : | PW-3 |
| Name | : | சிலம்பரசன் |
| Father's /Husband Name | : | பாண்டியன் |
| Village | : | மருதுவாஞ்சேரி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 31 |
| Occupation | : | கொத்தனார் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 22nd day February 2024.
Both Accused present.

**முதல் விசாரணை:-**

அ.சா.1 வசந்தா எனது தாயார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது பக்கத்து வீட்டில் வசித்து வருபவர்கள். கடந்த 05.09.2020-ம் தேதி மதியம் 03.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்த போது வாசலில் எனது தாயார் நின்று கொண்டிருந்தார். அப்போது சத்தம் கேட்டு நான் வெளியே வந்து பார்த்தபோது எனது தாயார் தலையில் ரத்த காயம் இருந்தது. எனது தாயாரின் புடவை சேதுராமன் கையில் பிடித்துகொண்டு இழுத்துக்கொண்டிருந்தார். நான் அதை பார்த்து ஏன் எனது அம்மாவின் புடவையை இழுக்கிறாய் என்று சேதுராமனிடம் கேட்ட போது எதிரி நீதித்தமிழன் மன்வெட்டியால் எனது தலையில் தாக்கினார். அதில் எனக்கு வலது கண் அருகே காயம் ஏற்பட்டது. (சாட்சி காயத்தை காண்பித்து சாட்சியமளித்தார்). பின்னர் ஊர்காரர்களும் எனது மனைவியும் சம்பவத்தை தடுக்க குறுக்கிட்ட போது எதிரிகள் எங்கள் அனைவரையும் கொன்றுவிடுவதாக மிரட்டினார்கள். பிறகு, 108 ஆம்புலன்ஸ் மூலம் திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :

ஆஜர் எதிரிகள் எனது பெரியப்பா மகன்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்து எத்தனை நிமிடங்களில் எனது மனைவி புவனேஸ்வரி சம்பவ இடத்திற்கு வந்தார் என்றால் நான் அடிப்பட்ட உடன் அவர் அங்கிருந்துதான் அவர் என்னை தூக்கினார். எனது தந்தை எத்தனை

நிமிடங்களுக்கு பிறகு வந்தார் என்றால் நிமிடக்கணக்கு தெரியவில்லை, சுமார் 10 நிமிடங்களில் இருந்தார். எனது தந்தை வரும்பொழுது எதிரிகள் அங்கு இருந்தார்களா என்றால் இருந்தார்கள், அவ்வாறு இருந்ததால்தான் எனது தந்தையையும் மிரட்டினார்கள். சம்பவத்திற்கான காரணம் என்னவென்றால் வாய்க்கால் தகராறு ஆகும். வயல் சொத்து பிரிக்கப்பட்ட சொத்தா என்றால் வாய்மொழியாக பிரிக்கப்பட்ட சொத்து. வாய்க்கால் எதிரிகளின் வயலில் உள்ளதா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும் இந்த எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஓம். M.S. பாரதிதாசன் M.L.,)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C. No.77/2021 |
| Deposition of witness | : | PW-4 |
| Name | : | புவனேஸ்வரி |
| Father's /Husband Name | : | சிலம்பரசன் |
| Village | : | மருதுவாஞ்சேரி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 29 |
| Occupation | : | ஆசிரியர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 22nd day February 2024.
Both Accused present.

**முதல் விசாரணை:-**

அ.சா.1 வசந்தா எனது மாமியார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது பக்கத்து வீட்டில் வசித்து வருபவர்கள். கடந்த 05.09.2020-ம் தேதி மதியம் 03.00 மணியளவில் நான் எனது வீட்டில் கொல்லைப்பக்கத்தில் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். அப்போது வீட்டு வாசலில் சத்தம் கேட்டது நான் சென்று பார்த்த போது எனது மாமியார் வசந்தா தலையில் ரத்தம் வடிந்துக்கொண்டு காணப்பட்டார். அப்பொழுது எதிரி சேதுராமன் எனது மாமியார் வசந்தாவின் சேலையை கையில் வைத்துக்கொண்டு தகாத வார்த்தைகளாக குச்சிகாரி தேவடியா என்று அசிங்கமாக திட்டிக்கொண்டிருந்தார். அப்பொழுது அதை தடுக்க வந்த எனது கணவர் சிலம்பரசன் சென்று அவரது அம்மாவை ஏன் அசிங்கபடுத்துறீங்க என்று கேட்டதற்கு எதிரி நீதித்தமிழன் மன்வெட்டியால் எனது கணவரை தாக்கினார். அதில் எனது கணவர் சிலம்பரசனுக்கு வலது பக்க கண் அருகே காயம்பட்டு ரத்தம் வடிந்தது. பிறகு அந்த ரத்தம் அவரது சட்டையிலும் பட்டது. பிறகு ஊர்காரர்களும், நாங்களும் சம்பவத்தை தடுக்க முயன்றபோது எதிரிகள் உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று எங்களை பார்த்து மிரட்டி விட்டு சென்றார்கள். பிறகு காயம்பட்ட அ.சா.1 எனது மாமியாரையும், எனது கணவர் சிலம்பரசனையும் திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :

சம்பவத்திற்கான காரணம் என்னவென்றால் வாய்க்கால் தகராறு ஆகும். ஆஜர் எதிரிகள் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது மாமனாரின் அண்ணன் மகன்கள். எனது கனவரை அடிக்கும் பொழுது நான் அவருக்கு பக்கத்தில் தான் இருந்தேன். போலிசார் என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் இல்லை. விசாரித்தார்களா என்றால் இல்லை. சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. நான் பக்கத்தில் இருந்து தான் சம்பவத்தை பார்த்தேன். எனது கணவர் சிலம்பரசன் காயத்திற்கும், எதிரிகளுக்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம். M.S. பாரதிதாசன் M.L.,)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.